# ஏப்ரல்- 26 - வியாழன்

**தூய நல்லாலோசனை மாதா**

**உமது பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது என்று அறிவிப்பேன்: திபா. 89:2**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 13 : 13 – 25

சகோதர சகோதரிகளே! பவுலும் அவரோடு இருந்தவர்களும் பாப்போவிலிருந்து கப்பலேறி, பம்பிலியாவிலுள்ள பெருகை நகருக்கு வந்தார்கள். அங்கே யோவான் அவர்களை விட்டு அகன்று எருசலேமுக்குத் திரும்பினார்.அவர்கள் பெருகையிலிருந்து புறப்பட்டுச் சென்று பிசிதியாவிலுள்ள அந்தியோக்கியாவை அடைந்தார்கள். ஓய்வு நாளன்று அவர்கள் தொழுகைக் கூடத்திற்குச் சென்று அங்கு அமர்ந்திருந்தார்கள். திருச்சட்டமும் இறைவாக்கினர் நூல்களும் வாசித்து முடிந்தபின் தொழுகைக் கூடத் தலைவர்கள் அவர்களிடம் ஆளனுப்பி, ”சகோதரரே, உங்களுள் யாராவது மக்களுக்கு அறிவுரை கூறுவதாயிருந்தால் கூறலாம்” என்று கேட்டுக்கொண்டார்கள். அப்போது பவுல் எழுந்து கையால் சைகைகாட்டிவிட்டுக் கூறியது ”இஸ்ரயேல் மக்களே, கடவுளுக்கு அஞ்சுவோரே, கேளுங்கள்.இந்த இஸ்ரயேல் மக்களின் கடவுள் நம்முடைய மூதாயரைத் தேர்ந்தெடுத்தார் அவர்கள் எகிப்து நாட்டில் அன்னியர்களாகத் தங்கியிருந்தபோது அவர்களை ஒரு பெரிய மக்களினமாக்கினார். பின்பு அவர்தம் தோள் வலிமையைக் காட்டி அவர்களை அந்த நாட்டைவிட்டு வெளியே அழைத்துக்கொண்டுவந்தார்நாற்பது ஆண்டு காலமாய்ப் பாலை நிலத்தில் அவர்களிடம் மிகுந்த பொறுமை காட்டினார்.அவர் கானான் நாட்டின்மீது ஏழு மக்களினங்களை அழித்து அவர்கள் நாட்டை இவர்களுக்கு ஏறக்குறைய நானூற்றைம்பது ஆண்டுகள் உரிமைச் சொத்தாக அளித்தார்.அதன் பின்பு இறைவாக்கினர் சாமுவேலின் காலம்வரை அவர்களுக்கு நீதித் தலைவர்களை அளித்தார்.பின்பு அவர்கள் தங்களுக்கு ஓர் அரசர் வேண்டும் என்று கேட்டார்கள். கடவுள் கீசு என்பவரின் மகனான சவுல் என்பவரை அவர்களுக்கு அரசராகக் கொடுத்தார். பென்யமின் குலத்தினராகிய அவர் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார்.பின்பு கடவுள் அவரை நீக்கிவிட்டுத் தாவீதை அவர்களுக்கு அரசராக ஏற்படுத்தினார் அவரைக் குறித்து ”ஈசாயின் மகனான தாவீதை என் இதயத்துக்கு உகந்தவனாகக் கண்டேன் என் விருப்பம் அனைத்தையும் அவன் நிறைவேற்றுவான்” என்று சான்று பகர்ந்தார்தாம் அளித்த வாக்குறுதியின்படி கடவுள் அவருடைய வழிமரபிலிருந்தே இஸ்ரேலுக்கு இயேசு என்னும் மீட்பர் தோன்றச் செய்தார்.அவருடைய வருகைக்கு முன்பே யோவான், ”மனம்மாறி திருமுழுக்குப் பெறுங்கள்” என்று இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் பறைசாற்றி வந்தார்.யோவான் தம் வாழ்க்கை என்னும் ஓட்டத்தை முடிக்கும் தறுவாயில் ”நான் யார் என நீங்கள் நினைக்கிறீர்களோ அவரல்ல நான். இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார் அவருடைய மிதியடிகளை அவிழ்க்கவும் எனக்குத் தகுதியில்லை” என்று கூறினார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பை என்றென்றும்
நான் அறிவிப்பேன்.

## நற்செய்தி : யோவான் 13 : 16 – 20

அக்காலத்தில் சீடர்களின் பாதங்களைக் கழுவிய பின் இயேசு அவர்களுக்கு: “பணியாளர் தலைவரைவிடப் பெரியவர் அல்லர் தூது அனுப்பப்பட்டவரும் அவரை அனுப்பியவரை விடப் பெரியவர் அல்ல என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.இவற்றை நீங்கள் அறிந்து அதன்படி நடப்பீர்கள் என்றால் நீங்கள் பேறுபெற்றவர்கள்.உங்கள் அனைவரையும்பற்றி நான் பேசவில்லை. நான் தேர்ந்துகொண்டவர்கள் யாரென எனக்குத் தெரியும். எனினும், ”என்னோடு உண்பவனே என்மேல் பாய்ந்தான்” என்னும் மறைநூல் வாக்கு நிறைவேறியாக வேண்டும்.அது நிறைவேறும்போது, ”இருக்கிறவர் நானே” என்று நீங்கள் நம்புமாறு இப்போதே, அது நிறைவேறுமுன்பே, அதுபற்றி உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன்.நான் அனுப்புகிறவரை ஏற்றுக்கொள்பவர் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவர் என்னை அனுப்பியவரையே ஏற்றுக்கொள்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள கடவுள் ஒருவரே யாவற்றிற்கும் தலைவர் அவரைவிடத் தலைவர் வேறு யாருமில்லை. நாங்கள் அனைவரும் அவரது பணியளர்களே என்றும் அப்பணியாளர்களாகிய நாங்கள் அவரை உண்மையுடன் ஏற்றுக்கொண்டு அவரின் சித்தத்திற்கேற்ப வாழ்வோமாயின் எவ்வாறான தீய சக்திகளோ அல்லது வேண்டப்படாத எதிரிகளோ எங்களை நெருங்க முடியாது என்பதை தெரிவிக்கின்றன. “எதிரி எவராலும் வஞ்சிக்க முடியாது தீயவன் எவனாலும் ஒடுக்க முடியாது” (தி.பா. 89:22) நாங்கள் இறைவனை ஏற்றுக் கொள்ளாத் தன்மையாலும், விசுவாசமற்ற தன்மையாலும் எம் மத்தியிலே போராட்டங்களும், அழிவுகளும், பதட்ட நிலைகளும் காணப்படுகின்றன. நாங்கள் ஆன்மீக சம்மந்தமான வழிபாடுகள், தியான மறையுரைகள் யாவற்றிலும் பங்கு கொள்கின்றோம், ஆனால் நாங்கள் ஏழை பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று மாறுபட்ட வாழ்க்கை வாழ்வதனால் பிழவுகள், பிரச்சனைகள் எங்கள் மத்தியில் ஏற்படுகின்றன. எனவேதான் “பணியாளன் தலைவரைவிட உயர்ந்தவரல்ல தூது அனுப்பியவரும் அனுப்பியவரை விடப் பெரியவரல்ல எனவே யாவரும் சமமே” என்று இயேசு கூறுவதை (யோவா.13:6)ல் பார்க்கின்றோம். இவ் இறைவார்த்தைக்கிணங்க எம் மத்தியில் காணப்படும் நான் என்ற அகங்ககாரம், ஆணவம், தற்பெருமை இவை யாவும் எம்மத்தியில் இருந்து எடுக்கப்படவேண்டும். ஆனால் நாங்கள் மற்றவர்கள் எங்களைப் பார்க்கவேண்டும். மற்றவர்கள் மத்தியில் நான்தான் பெரியவன் என்று வெளிவேடமாகவே வாழ்கின்றோம். அவ்வாறு வாழாமல் இறைவன்மேல் நம்பிக்கை கொண்டவர்களாக அவர் காட்டிய நல்வழியில் நடந்து யாவரும் சமமே என்று ஒற்றுமையுடன் வாழ்வோமென்று இன்றைய நாளில் முடிவெடுப்போம்.